[2012 ஏப்ரல் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எனக்கு இடது பக்கம் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், தயவுசெய்து பத்திரிகையாளர்களோடு அவையில் இருந்து கொண்டு உரையாடக்கூடாது. அது மரபு அல்ல. எனவே, இதைக் கவனத்தில்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

85—

சொந்தக் கட்டடம்

__6968—திரு. என்.வி. காமராஜ்:__

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு மற்றும் வேதாரண்யம் கால்நடை மருந்தகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேதாரண்யம் தொகுதியைச் சேர்ந்த தலைஞாயிறு மற்றும் வேதாரண்யம் ஆகிய இரு கால்நடை மருந்தகங்களுக்கும் புதிய கட்டடம் கட்டப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். நபார்டு திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மருத்துவமனைக் கட்டடத்திற்கும் தலா ரூ. 26.66 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. கட்டடம் கட்ட தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.*

திரு. என்.வி. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகின்றேன். நான் கேட்டதோ இரண்டு கட்டடங்கள். மாண்புமிகு அம்மா அவர்கள்*

கொடுத்ததோ ஆறு கட்டடங்கள். வேதாரண்யம், தலைஞாயிறு, நாலுவேதபதி, ஆயக்காரன்புலம் மூன்று, மும்பளச்சேரி, தேத்தாக்குடி வடக்கு ஆகிய ஆறு கால்நடை மருந்தகக் கட்டடங்களைக் கட்டுவதற்கு, கட்டடம் ஒன்றுக்கு ரூ. 26.66 இலட்சம் வீதம் கொடுத்து வேலைகள் நடைபெறுவதற்கு ஆணையிட்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.*

திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம், என்னை வாழ வைக்கும் தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதம் தொட்டு வணங்கி, அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார் ஒன்றியத்தினுடைய கிளை மருத்துவமனையை மேம்பாடு செய்து, புதிய மருத்துவமனையை அமைத்துத் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

முற்பகல் 10—40

திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பி. அக்ரஹாரத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். மேலும், நல்லம்பள்ளி ஒன்றியத்தில் செக்காரப்பட்டியில் கால்நடை மருத்துவமனை கட்டி 3 ஆண்டுகளாகியும் இன்னும்*

திறக்கப்படவில்லை; மருத்துவர்கள் அமர்த்தப்படவில்லை. அந்தப் பகுதியில் சுமார் 10 கிராமங்கள் உள்ளன. 6,000–க்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. அந்தக் கால்நடை மருத்துவமனையைத் திறந்து, மருத்துவர்களை நியமிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய கால்நடைக் கிளை நிலையம் வேண்டுமென்றால், 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு வேறு கால்நடைக் கிளை நிலையம் இருக்கக்கூடாது; மற்றும் 3,000 கால்நடைகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும் என்கிற விதி இருக்கிறது. அதற்குட்பட்டு உறுப்பினர் சொல்கின்ற கிராமம் இருக்குமானால், நிச்சயமாக அம்மாவினுடைய அரசு பரிசீலனை செய்யும். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே கால்நடை மருத்துவர்கள் பணிக்கு எடுக்கப்படவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் 843 கால்நடை உதவி மருத்துவர்களை கடந்த வருடம் எடுப்பதாக அறிவித்திருந்தார்கள். தற்போது 843 கால்நடை உதவி மருத்துவர்கள் பணிக்கு எடுக்கப்பட்டுவிட்டார்கள். அவர்களை எந்தெந்தப் பகுதியில் பணியமர்த்தலாம் என்பது குறித்த பணி நடந்து வருகிறது. இந்த மாதத்திற்குள்ளாக புதிய கால்நடை உதவி மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள். மருத்துவர்களே இல்லாத கால்நடை மருத்துவமனையே இல்லாத நிலையை அடுத்த மாதத்திலிருந்து நீங்கள் பார்க்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிறர் துன்பம் கண்டு இரங்குதல் மனித குணம். அந்தத் துன்பத்தை நீக்க உதவுவது தெய்வ குணம் என்பார்கள். அப்படிப்பட்ட தெய்வ குணம் கொண்டு, அன்னை தமிழகத்திலே, 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்று அயராது உழைத்துக் கொண்டிருக்கின்ற, இந்தியத் திருநாட்டின் வழிகாட்டி, வாழும் மனித தெய்வம், அம்மா அவர்களை வணங்குகிறேன். விருதுநகர்*

மாவட்டத்திற்கான ஆட்டுப் பண்ணையை தன்னகத்தே கொண்டுள்ள, கால்நடைகள் அதிகம் நிறைந்த பகுதியான சாத்தூர் தொகுதிக்கு, சாத்தூர் ஒன்றியம் படந்தாலிலும், வேம்பக்கோட்டை ஒன்றியம் சிப்பிப்பாறையிலும் கால்நடை மருந்தகங்களை அமைத்திடவும், மேலும் அனைத்து மாவட்டங்களிலும் இயங்காமல் உள்ள, குறிப்பாக விருதுநகர் மாவட்டத்தில் இல்லாமல் இருக்கிற நடமாடும் கால்நடை மருந்தகத்தை இயக்கச் செய்யவும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2012–2013 ஆம் ஆண்டுக்கு புதிதாக 20 கால்நடை மருந்தகங்களையும், 50 புதிய கால்நடை துணை மருத்துவமனைகளையும் அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே உங்களுடைய பகுதியை ஆய்வு செய்து, முடியும் என்று சொன்னால், நிச்சயமாக அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

86—

மின்சார உற்பத்திப் பிரிவு

***4674—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் மின்சார உற்பத்திப் பிரிவு தொடங்கி மக்களின் தேவைகளுக்கு மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,